## கிருஷ்ணகிரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் நடவடிக்கைகள்

**முன்னிலை : திரு. டி.பாபு.**

**ந.க.எண்: கே2/18413/2016,** **நாள்:31.08.2017.**

பொருள்: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - கிருஷ்ணகிரி மாவட்டம் - தளி ஊராட்சி ஒன்றியம் - தேவி (திருமதி) பெ, - தட்டச்சர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:

1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்: 5846/PSD-F/2014,நாள்: 13.08.2014.
2. கிருஷ்ணகிரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் நடவடிக்கை நக.எண்: கே2/20406/2014, நாள்: 19.09.2014.
3. மாநில கூர்நோக்கு குழுவின் செயல்முறை ஆணை எண்:12136/CV-4(2)/2016-3, நாள்:09.05.2017.
4. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்: 5846/PSD-F/2014, நாள்:02.06.2017 மற்றும் 31.07.2017.
5. வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ), தளி, ந.க.எண்:270/2016/அ1, நாள்:23.08.2017.

----000----

ஆணை: -

கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2013-2014-ம் ஆண்டு ஒதுக்கீட்டின்படி தட்டச்சர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்டு, தற்போது தளி ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரிந்து வரும் திருமதி.பெ.தேவி என்பவரது பணியினை பார்வை(4)இல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய இசைவின் அடிப்படையில் தட்டச்சர் நிலையில் 26.09.2014 முற்பகல் முதல் கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து இதன் வழி ஆணையிடப்படுகிறது.

### நிபந்தனை

"தனியரின் பணிவரன்முறையானது 2013-2014- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி- IV க்கான தேர்வு தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் / உயர்நீதி மன்ற மதுரை கிளை ஆகியவற்றில் தொடரப்பட்ட வழக்குகள் பேரில் அளிக்கப்படும் தீர்ப்புரைக்கு உட்பட்டதாகும்."

மேலும், மேற்காணும் பணியாளர் தகுதிகான் பருவ காலத்திற்குள் ஊரக வளர்ச்சி அலுவலர்களுக்கான துறைத்தேர்வுகள் மற்றும் Office Automation ஆகிய தேர்வுகளில் தேர்ச்சிபெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),
கிருஷ்ணகிரி.

பெறுநர்,

திருமதி.பெ.தேவி,
தட்டச்சர்,
ஊராட்சி ஒன்றியம்,
தளி.
(சம்மந்தப்பட்ட கட்டுப்பாட்டு அலுவலர் மூலமாக சார்வு செய்திடும் பொருட்டு)

**நகல் :** 1. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ), ஊராட்சி ஒன்றியம், தளி.
2. கே2 முக்கிய ஆவணத் தொகுப்பு.